# மத்திய மகாண சபை - 2018

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய மாகாண சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை யூலை 31 ஆந் திகதி வெளியிடப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசு மற்றும் வங்கி மீதியின் கீழ் பொருட்களை அடகுக்கு பெறுவோரிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களாக ரூபா 18,798,600 குறிப்பிடப்பட்டிருந்த போதும் வங்கி உறுதிப்புட்ததலின் பிரகாரம் அம்மீதி ரூபா 16,198,600 ஆக இருந்தமையால் ரூபா 2,600,000 வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டிற்கு காரணங்கள் ஆராயப்பட்டு சரிசெய்யப்பட வேண்டும். | பதில் கிடைக்கவில்லை. |

### 1.6.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுகாதார திணைக்களம் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என்பவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட முற்பணங்களுக்காக கடனின் கீழ் ரூபா 165,073,802 ஆன கடன் மீதியொன்று தீர்வுசெய்ய மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட முற்பண கடன் மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கவில்லை. |
| (ஆ) | நடைமுறைப் பொறுப்பின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 8,619,766 ஆன அனைத்து மாகாணங்களுக்கு இடையே இடமாற்ற கடன் மீதி தீர்வு செய்வதற்குப் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 1,088,623 ஆன அனைத்து மாகாண தொங்கல் கணக்கில் மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மாகாணங்களுக்கு இடையே இடமாற்ற கடன் மீதி தீர்வு செய்வதற்குப் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வெவ்வேறு பொறுப்புக் கணக்கில் வருடக் கணக்காக மாற்றமுராது முன்கொண்டு வரப்படும் வளங்கள் நிலையத்தின் முற்பணக் கணக்கில் ரூபா 1,969,736 ஆன மீதியொன்று தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணக் கணக்கு நிலுவை கடன் மீதிகள் தாமதமின்றி தீர்வுசெய்ய மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் கிடைக்கவில்லை. |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல உள்ளவாறு 07 நிறுவனங்களின் ரூபா 2,671,198 கூட்டுமொத்தமான தீர்வுசெய்யப்படாத மீதியொன்று காணப்பட்டது. | கட்டுநிதி மீதி திசெம்பர் 31 இற்கு முன்னர் தீர்வு செயய்யப்பட வேண்டும். | பதில் கிடைக்கவில்லை. |

### 1.6.3 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1942 இன் 18 ஆம் இலக்க அரச சேவைகள் சேமலாப நிதியக் கட்டளைச் சட்டம் | | |
| | உறுப்பினர்களினதும் எதிர்கட்சி தலைர்களினதும் தனிப்பட்ட பதவியணியனரின் உறுப்பினர்களுக்கு 2013 ஆம் ஆணமு முதல் 2018 ஆம் ஆண்டிற்காக அரசசேவை சேமலாப நிதியத்திகாக செலுத்த வேண்டிய ரூபா 73,579,724 கூட்டுத்தொகையான ஊழியர் பங்களிப்புத் தொகை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | | |
| | தாபன விதிக்கோவையின் ii ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஹட்டன் சீடா கல்வி வலயத்தில் பாடசாலைகளின ˙27 ஆசிரியர்களின் தகுதிகாண | ஆசிரியர் அறிவூட்டப்பட்டு தனிப்பட்ட கோவைகள் குறைபாடு பூர்த்தி செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட | குறைபாடுகளை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | காலம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் வெவ்வேறு காரணங்கள் பேரில் சேவை உறுதிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| (இ) | மத்திய மாகாண நிதி விதிக்கோவை (மா.நி.வி)<br>------------------------------------------------ | | |
| | மா.நி.வி.46.1 இன் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சகாதார திணைக்களம் 18 செலவின விடயங்களில் தேறிய நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 2,111,256 கூட்டுத்தொகையான பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிஏற்பாட்டு எல்லைக்குள் கடப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீர், மின்சாரம் , தொலைபேசி பட்டியல் மற்றும் பிரயாணச் செலவினம் என்பவற்றின் பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளன. |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் 09 நிறுவனங்களின் பொது வைப்புக்கணக்குகளில் காணப்பட்ட வைப்புச் செய்த நாள் 02 ஆண்டுகளை கடந்த உரித்துக்கோராத ரூபா 14,914,340 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 ஆண்டுகளை கடந்த உரித்துக் கோராத ரூபா வைப்புக்கள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை | 02 ஆண்டுகளை வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | சனாதிபதி செயலகத்தின் பீஎஸ்/எஸ்பீ/எஸ்பீ/பீ/228 ஆம் இலக்க 2018 செப்தம்பர் 18 ஆந் திகதிய கடிதம் மற்றும் திறைசேரி செயலாளரின் ந.அ.01/2015(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04(அ) பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு செயலமர்வொன்றிற்கு சமூகமளிப்பதற்கு மாகாண சபை அமைச்சருக்கு அங்கீகாரம் கிடைத்த நாட்களை விட கூடிய நாட்கள் தரித்திருந்தமைக்காக ரூபா 384,913 மற்றும் நடாத்தப்படும் நாட்டினால் உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டு இருக்கையில் இணைந்த படிகளாக ரூபா 531,537 தொகை கொடுப்பனவு செய்தமையால் ரூபா 916,450 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கூடுதலான கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். | நடாத்தப்படும் நாட்டினால் உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. |

(ஊ) ஏனைய சுற்றறிக்கை
-----------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கொத்மலே கல்வி வலயத்தின் 14 பாடசாலைகளில் 29 ஆசிரியர்கள் மற்றும் ஹட்டன் கல்லி வலயத்தில் பாடசாலைகளில் 484 ஆசிரியர்கள் 08 ஆண்டுகள் முதல் 32 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் ஒரே பாடசாலையில் சேவை புரிந்து வந்தனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் மிகவும் செயற்திறனாக குறிக்கப்பட்ட காலப்பகுதியில் இடமாற்றம் வழங்குதல் | அதிகஷ்டப் பிரதேசங் களுக்கரிய பாடசாலை களின் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யும் போது சிக்கல்கள் உருவாகியுள்ளது. குறித்த சீராக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2018 பெப்ரவரி 15 ஆந் திகதிய வியாபார மற்றும் முதலீட்டு கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 2/2018 இன் 2.5 பந்தியின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத பிரதான செயலகத்தின் இயந்திர பொறியியலாளருக்கும் கண்டி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் வில்கமுவ வலயக் கல்வி பணிப்பாளருக்கும் 2018 ஆம் ஆண்டின் போது சலுகை அடிப்படையிலான மோட்டர் இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உரிய நிறுவனங்களினால் பதில் கிடைத்தவுடன் சமர்ப்பிக்கபடும் |

**2. வருமான நிர்வாகம்**
-----------------------------------

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் வருமான குறியீடுகள் 09 இன் தேறிய மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே விலகல் ரூபா 498,820 முதல் ரூபா 199,477,192 வரை அதாவது 11 சதவீதம் முதல் 128 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரித்திருந்ததுடன் 10 வருமான கூறுகளின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே விலகல் | மதிப்பீடு தயாரிக்கும் போது முடியுமான வரை சரியாக தயாரிக்க வேண்டும். | குறைபாடுகளை ஏற்றுக்கொள்கின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,662,197 முதல் ரூபா 508,588,856 வரை அதாவது 10 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவடைந்து காணப்பட்டது. | | |
| (ஆ) | கடந்த ஐந்தாண்டுகளுக்கு ஒப்பாக 25 வருமான விடயங்களில் வருமானம் 11 சதவீதம் முதல் 68 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. | மதிப்பீடு தயாரிக்கும் போது முடியுமான வரை சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | குறைபாடுகளை ஏற்றுக்கொள்கின்றேன் |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய பிரதான செயலாளரால் சேகரிக்கப்பட்ட முத்திரைக் கட்டணங்கள் ரூபா 712,734,330 மற்றம் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 287,631,648 அந்த நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அவ்வாறு செலுத்த வேண்டிய தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பிரதான செயலாளரின் கணக்கிற்கு சேரும் முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் என்பவற்றை அந்த நிறுவனங்களுக்கு வழங்குவதற்கும் வெளிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | வருமானக் குறியீடு இலக்கம் 10-02-07-01 ஆதனங்கள் கையளித்தல் மீதான முத்திரை கட்டணங்களின் கீழ் நிலுவை வருமானம் 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டில் ரூபா 7,305,912 ஆல் அதிகரித்திருந்ததுடன் அது 18 சதவீத அதிகரிப்பொன்றாகும். | அதிகரிக்கும் நிலுவை வருமானத்திற்கு ஒப்பாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (உ) | விவசாய மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக வருடாந்த குத்தகை நிபந்தனைகளின் கீழ் வழங்கப்பட்டிருந்த அரச காணி 2006 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 209,178 ஆன நிலுவை குத்தகையொன்ற அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | குறைபாடுகளை ஏற்றுக்கொள்கின்றேன் |

## 3 நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தின் ரூபா 28,974,672,234 ஆன இருந்ததுடன், பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 28,112,420,432 ஆகும்.

## 04. நியதிச்சட்ட கணக்குகள்/ நிதியக்கணக்குகள்/ வணிக முற்பணக் கணக்குகள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்குகள்

### 4.1 அதிகாரசபைக் கணக்குகள் / நிதியக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **4.1.1 மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபை** | | |
| (அ) ராகல பஸ் நிலையம் நிறுத்துமிடத்தில் அமைந்துள்ள காணியை கொள்வனவு செய்வதற்காக ரூபா 6,668.311 தொகை 2018 சனவரி 09 ஆந் திகதி காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த போதும் காணியின் உரித்து இதுவரை கிடைத்திருக்கவில்லை. | உரித்தைப் பெற்றக்கொள்ள டநவடிக்கை எடுக்ப்பட வேண்டும். | காணியின் சட்டரீதியான உரித்தினை பெறுவதற்காக காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு பணம் வழங்கப்பட்டிருந்த போதும் உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்காக உரிய நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதாக அறியத்தருகின்றேன். |
| **4.1.2 மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை** | | |
| (அ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்களுக்கு பொருட்களை கொள்வனவு செய்யும் போது தேவைப்பாடொன்றில்லாமல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,045,363 பெறுமதியான பொருட்கள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தாமல் குவித்து வைக்கப்பட்டிருந்தன. | எதிர்வுகூறப்பட்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் | அவசர அனர்த்த நிலைமைக்கு முகங்கொடுப்பதற்காக இருப்பு வைத்துக்கொள்ளப்பட்டது. |
| (ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திம்புல்பதனவில் அமைந்துள்ள 4,261 சதுர அடி அளவிலான பொறியியலாளர் விடுதி (PJ கட்டிடம்) 03 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கும் போது ரூபா | மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் காணி கட்டிடங்களை குத்தகைக்கு வழங்க வேண்டும். | குத்தகை உடன்படிக்கை புதப்பிப்பதாகவும் கேள்வி வழங்கியருக்கையில் குத்தகைக்கு வழங்கிய கட்டிடம் திருத்தம் |

| | | |
|---|---|---|
| 14,790,000 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்ததுடன் குத்தகை உடன்படிக்கை பின்னர் கடடிட திருத்தங்களுக்காக அதிகாரசபையால் ரூபா ரூபா 1,4444,038 செலவிடப்பட்டிருந்தத, | | செய்யப்பட்டதுடன பாகங்கள் 2019 மே 30 ஆந் திகதி திம்புல நிறைவேற்று அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டது. |
| (இ) 2018 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய 1077 ஆம் இலக்க ரூபா 10,440,000 பெறுமதியான குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் 03 ஆண்டுகளுக்காக அரசின் மதிப்பிடப்பட்ட தொகை கருத்திற்கொள்ளப்பட்டு 29 ஆண்டுகளுக்காக குத்தகைக்கு வழங்கியதால் அதிகாசசபைக்குரிய நட்டம் ரூபா 14,790,000 ஆக இருந்தமை | பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | அப்போதிருந்த தலைவரால் தவறொன்று காரணமாக குத்தகை ஒப்பந்தம் திருத்தம் செய்யப்படும். |

**4.1.3 பிராந்திய பொருளதார அபிவிருத்தி நிறுவனம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிராந்திய பொருளதார அபிவிருத்தி நிறுவனத்தின் சாசனத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்படாமல் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நியதிச் சட்டத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் பணிப்பாளர் பதவிக்காக நாடளாவிய ரீதியிலிான சேவைக்குரிய நிறைவேற்று உத்தியோகத்தர்நியமிக்க வேண்டிய போதிலும் நிறுவன ஆரம்ப முதல் பதில் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | நியதிச்சட்டத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் 44 ஆவது முகாமைத்தவு சபை கூட்டத்திக் போது கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுடன் இநத ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டது.பணிப்பாளர் நியமனம் தொடர்பில் பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ) 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு முடியாத விவசாய செயற்திட்டங்களில் ரூபா 5,082,015 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் போது அச்செயற்திட்டங்கள் பூர்த்தி செய்ய முடியாமையால் ரூபா 1,313,285 மாத்திர்ம செலவிடப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் எதிர்வரும் ஆண்டிற்காக ரூபா 3,769,730 ஆன செயற்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது, | தாமதத்திற்கு காரணங்கள் தேடப்பட்டு நிறைவேற்றுவதை துரிதப்படுத்தல் | பதில் வழங்கப்படவில்லை. |
| (இ) கட்டுகித்துல சிற்றுண்டிச்சாலையின் உப குத்தகை உடன்படிக்கை காலம் 2018 செப்தம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தலும் | பதில் வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| போதும் 2019 மே மாதம் வரையிலும் சிற்றுண்டிச்சாலையை மீள பெற்றுக் கொள்வதற்கும் ரூபா 1,556,990 ஆன நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். | |

**4.1.4 கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய கட்டுப்பாட்டு நிதியம்**

| | | |
|---|---|---|
| குறித்த சாசனத்தின் 8.42.1 பிரிவின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய வருடாந்த கணக்குகள் அல்லது நிர்வாக அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்த சாசனத்தின் நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். | 2007 -2015 வரை கணக்கு அறிக்கைகள் மாகாண கணக்காய்வுபணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. |

**4.1.5 முன்பிள்ளை பருவ அபிவிருத்தி அலகு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2005 இன் 03 ஆம் இலக்க சாசனத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள முன்பிள்ளை பருவ அபிவிருத்தி அலகில் வருடாந்த கணக்கு 2016 ஆம் ஆண்டு முதல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சாசனத்தின் பிரகாரம் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இங்கு அனைத்து மாகாண சபை செலவினத் தலைப்பின் கீழ் பிரதான அமைச்சு மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் சகல செலவினங்களும் ஒதுக்கீட்டு கணக்கு மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன. |
| (ஆ) | மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள சகல முன்பள்ளி பாடசாலைகள் பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் 3,380 ஆன மொத்த பாடசாலைகளில் 2,378 மாத்திலம் பதிவசெய்யப்பட்டு தற்காலிக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன. | மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள சகல முன்பள்ளி பாடசாலைகள் பதிவுசெய்யப்பட வேண்டும் | பத்திரிகை விளம்பரம் மூலம் மற்றும் கிராம சேவையாளர்ககள் பிரிவு மட்டத்தில் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. தோட்டதுறையில் சிறு பின்னடைவு உண்டு. |

## 4.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்

### 4.2.1 552202 ஆம் இலக்க குருதெனிய கல்வி அபிவிருத்தி கேந்திரத்தின் வர்த்தக முற்பணக் கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 736,450 ஆன வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சில வருமானங்களுக்கு பற்றுச்சீட்டு வழங்கி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏனையயவற்றுக்கு P.I.V வழங்கி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) ரூபா 341,000 பெறுமதியான 10 வானியல் பொருள் உபகரணங்கள் மற்றம் ரூபா 1,299,300 பெறுமதியான நிர்மாணிக்கப்பட்ட வானியல் பொருள் பார்வையிடும் நிலையம் நிலையான சொத்துக்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நடைமுறையல்லாத சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது இருப்பு புத்தகங்களுக்கு உள்ளடக்கப்பட்ட போதும் கணக்குகளுக்கு எடுக்க தாமதமானது. |
| (இ) மாகாண நிதி விதிகளின் பிரகாரம் முற்பண கணக்குகளில் வரவு மற்றம் செலவுகள் மாதாந்த கணக்கு பொழிப்பினூடாக மாகாண திறைசேரிக்கு அறிக்கையிடப்படாதிருந்ததுடன் மூலதனச் சொத்துக்களின் தேய்வுப் பெறுமதி பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்காமை தொடர்பாக மாகாண சபைக்கு பணமாக அனுப்பி வைக்கப்படவில்லை. | மாகாண நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும | 2016 ஆம் ஆண்டு முதல் மாகாண திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. திறைசேரியின் அறிவுறுத்தல் களின் பிரகாரம் ஒதுக்கத்திற்கு செலவு வைத்தலுக்காக நடவடிக்கை எடுக்கப்படும். |

### 4.2.2 550202 ஆம் இலக்க மாபானாவதுர வள நிலையத்தின் முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் மேசைகள், கதிரைகள் திருத்தம் செய்வதற்குரிய 2018 ஆம் ஆண்டில் உற்பத்திக் கணக்கு தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் ரூபா 2,497,888 ஆன இறுதி மூலப்பொருள் கணக்கில் காண்பிக்கப்பட் டிருக்கவில்லை. | தேவைப்பாட்டின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன் மிகை மூலப்பொருள் இருப்பினை பயன்படுத்துவதற்காக தாமதமின்றி உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். | மேசைகள், கதிரைகள் திருத்தம் செய்வதனை துரிதமாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) வளங்கள் நிலையங்கள் முற்பணக் கணக்கு ஆரம்பம் முதல் 2017 ஆம் ஆண்டு வரை பற்றாக்குறையாக காணப்பட்ட காரணத்தினால் கணக்கை தீர்த்து மூடிவிடுவதற்கு 2018 ஆம் ஆண்டில் அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதும் அதற்காக அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | தொடர்ச்சியாக பற்றாக்குறை காணப்பட்டால் மீளமைப்பதற்கு அல்லது மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வின் பரிந்துரை செயற்படுத்தப்பட்டு வருகின்றது. |

### 4.2.2 550203 ஆம் இலக்க ஹட்டன் வள நிலையத்தின் முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) நிறுவனத்தின் நோக்கு மற்றம் இலக்கு என்பன நிறைவேற்றப்படும் வகையில் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். எதிர்வரும் ஆண்டில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) நிறவனத்தின் நடவடிக்கைககள் முறையாக பேணிச் செல்வதற்காக தேவையான நியதிச்சட்ட வரைவு 2015 செப்தம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிப்பதற்கு 2015 யூலை 16 ஆந் திகதி கூடிய முகாமைத்து குழு தீர்மானித்திருந்த போதும் 2019 எப்ரல் 10 ஆந் திகதி வரை உரிய நியதிச்சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நியுதிச்சட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். அடுத்த கட்டுப்பாட்டு சபையின் போது கலந்துரையாடுவதற்கு உட்படுத்தப்படும். |
| (இ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வர்ரதக முற்பணக் கணக்கின் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றம் 39 உரித்துக் கணக்குகளுக்குரிய பேரேட்டுக் கணக்குகள் பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட வேண்டும் | இந்நிறுவனத்தில் மிகவும் சிறிய கொடுக்கல் வாங்கல்கள் அளவு மாத்திரம் இடம்பெறுவதால் புறம்பான பேரேடொன்று பேணப்பட வில்லை. |
| (ஈ) மூலதனச் சொத்துக்களில் பெறுமானத் தேய்வுப் பெறுமதி, பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவுவைக்கும் பொருட்டு மாகாண திறைசேரிக்கு பணமாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

### 4.3 ஏனைய முற்பணக் கணக்குகள்

### 4.3.1 மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மாகாண கல்வித் திணைக்களத்தின் 3033 3033 உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 78,415,012 ஆன கடன் மீதியில் 1 ஆண்டு முதல் 22 ஆண்டு வரை காலப்பகுதிக்குரிய | அறவிடப்பட வேண்டிய தீர்வு செய்யப்பட வேண்டிய கடன் மீதி சுற்றறிக்கை பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட | 2019 மே 31 ஆந் திகதி வரை 55 கடன்பட்டோருக்காக ரூபா 2,715,061 தொகையும் 55 கடன்கொடுத்தொர் மீதிகளுக்காக ரூபா 2,647,600 |

| | | | |
|---|---|---|---|
| | பெறவேண்டிய ரூபா 72,210,770 காணப்பட்டதுடன் 1126 உத்தியோகத்தர்களுக்காக தீர்வு செய்யப்பட வேண்டிய ரூபா 33,805,835 ஆன கடன் மீதியில் 1 ஆண்டு முதல் 22 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய தீர்வு செய்யப்பட வேண்டிய ரூபா 28,465,005 உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | காலப்பகுதியில் தீர்வு செய்யப்பட வேண்டும் | தொகையும் தீர்வுசெய்யப்பட்டுள்ளதுடன் நி.பி 104(4) பரரிசோதனை சபையொன்று மூலம் இனங்காணப்பட்ட ரூபா 9,136,723 ஆன கடன் மீதி பதிவழிப்பதற்கு அங்கீகாரத் திற்காக திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மாகாண கல்வித் திணைக்களத்தின் 225 ஓய்வுபெற்ற / மரணித்த உத்தியோ கத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 12,871,790 ஆன கடன் மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 823,092 மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட / வேலையை விட்டுச்சென்ற 121 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,149,068 ஆன கடன் மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,750,140 ஆன மீதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடாமைக்கான காரணங்கள் இனங்காணப்பட்டு அறவிடப்பட வேண்டும். | 2018.12.31 ஆந் திகதி வரை ரூபா 5,056,842 கிடைத்துள்ளது. ஏனைய கடன் மீதிகள் தொடர்பாக ஓய்வூதிய திணைக்களத்துடன் தொடர்புபட்டு நவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண சபை அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மற்றும் தனியால் மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பிற்கு இடையே ரூபா 7,668,880 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | காணப்படும் மீதிகளின் வேறுபாட்டினை இயலுமான வரை விரைவில் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கூடுதலான அறவீடுகள் உரிய உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன் ரூபா 5,815,894 ஆன தவறான செலவுப் பெறுமதி எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 4.3.2 மாகாண சபை உறுப்பினர்களுக்கான முற்பணக் கணக்கு

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2001 மார்ச் 28 ஆந் திகதிய 01/2001 ஆம் இலக்க மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் மரணித்த உறுப்பினர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 92,176 ஆன கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் தொகையை விரைவில் அறவிடப்பட வேண்டும். | பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பதவியை விட்டுச் சென்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 157,114 தொகையை 2006 செப்தம்பர் 04 ஆந் திகதி முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் தொகையை விரைவில் அறவிடப்பட வேண்டும். | பிரதான செயலாளர் அலுவலகத்தின் சட்டப் பிரிவ ஊடாக தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றல்

#### 5.1.1 அரசின் மானியம்

மாகாண அபிவிருத்தி செயற்பாடுகளுக்ாக மீளாய்வாண்டிற்கு கிடைக்கப் பெற்றிருந்த நிதிஏற்பாடு மற்றும் பயன்பாடு தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | மூலாதாரம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை ரூபா மில்லியன் | குறைப்பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| (அ) | மாகாண திட்டவட்டமான மானியம் (PSDG) | 2,039.31 | 1,566.84 | 472.47 |
| (ஆ) | திட்டவட்டமான மானியம் (CBG) | 481.86 | 355.34 | 126.53 |
| (இ) | விசேட துறை அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (கல்வி) | 286.92 | 279.42 | 7.50 |
| (ஈ) | விசேட துறை அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (சுகாதாரம்) | 592.89 | 396.96 | 195.93 |
| | மொத்தம் | 3,400.98 | 2,598.56 | 802.43 |

### 5.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பீடீ/ஜபீஎஸ்/130/9/14/எம்சீ ஆம் இலக்க 2016 சனவரி 06 ஆநி திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மோட்டார் சைக்கில்களைப் பெற்றுக்கொண்டு வேறு பதவிகளுக்கு சென்ற 19 வெளிக்கள | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறிவிக்கப்பட்டிருந்த போதும் குறித்த உத்தியோகத்தர்களால் பணத்தை கொடுப்பனவு செய்ய முன்வரவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,617,180 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நீண்டகால குத்தகை பதிவேட்டின் பிரகாரம் 2016 முதல் 2018 ஆம் ஆண்டு வரை குத்தகைக்கு வழங்குவதற்கு அளவீட்டு நவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத 17 காணித்துண்டுகள் காணப்பட்டதுடன் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை அக்காணி குத்தகைக்கு வழங்கி வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அளவீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு குத்தகைக்கு வழங்குவதற்கு உரிய தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கைகள் மேற் கொண்டு வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை | பதில் வழங்கப்படவில்லை |
